வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 07.05.2026 வியாழக்கிழமை இதழ் : 121 பக்கங்கள் : 08

## இலங்கை - இந்தியா இடையே தரைவழி இணைப்பு அவசியம்!

### இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா வலியுறுத்து



கொழும்பு, மே. 07

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தரைவழி இணைப்பை உருவாக்கவேண்டியதன் அவசியத்தை இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மீண்டும் வலியுறுத்தியுள்ளமையோடு, இது விடயத்தில் தயக்கம் காட்டிக் கொண்டிருப்பதற்கான காலம் முடிந்துவிட்டது என்றும் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற உலகளாவிய புத்தாக்கம் மற்றும் தலைமைத்துவ மாநாட்டில் அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடல் வழியாகக் கொழும்புக்கும் சென்னைக்கும் இடையிலான தூரம் சுமார் 300 கிலோமீற்றர் என்றும், ஆனால் நமது இரு நாடுகளுக்கும் மிக அருகிலுள்ள இடங்களான

07

## தமிழக வெற்றி கழகத்தின் ஆட்சிக்கு காங்கிரஸ் நிபந்தனையுடன் ஆதரவு!

### இன்று முதலமைச்சராக பதவியேற்கிறார் விஜய்



சென்னை, மே. 07

தமிழகத்தில் அரசாங்கத்தை அமைப்பதற்காக நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்துக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவை இந்திய தேசிய காங்கிரஸ் முறையாக வழங்கியுள்ளது.

அகில இந்திய காங்கிரஸ் குழுவின் தமிழக மற்றும் புதுச்சேரி பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஆட்சி அமைக்க இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் ஆதரவை வழங்குமாறு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் முறையாகக் கோரிக்கை விடுத்திருந்தார்.

07

### வித்தியா படுகொலை வழக்கு:

## சுவிஸ்குமார் உள்ளிட்ட நால்வரின் தூக்குத் தண்டனை நேற்று உறுதி!

### உயர்நீதிமன்றம் முக்கிய தீர்ப்பு

கொழும்பு, மே. 07

முழு நாட்டையும் உலுக்கிய யாழ்ப்பாணம் - புங்குடுத்தீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை வழக்கில், சுவிஸ் குமார் உள்ளிட்ட நான்கு குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உயர்நீதிமன்றம் நேற்று உறுதி செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனைத் தீர்ப்புக்கு எதிராகக் குற்றவாளிகளால் தாக்கல் செய்யப்பட்ட மேன் முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணை நேற்று

07

### நீதித்துறை மீதான தலையீடு;

## சபையில் விவாதம் கோரி எதிர்க்கட்சிகள் பிரேரணை

கொழும்பு, மே. 07

நீதிமன்றங்களுக்கு நிறைவேற்று அதிகாரத்தால் விடுக்கப்படும் அழுத்தங்களைக் கண்டித்தும், இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் அவசர விவாதத்தை நடத்துமாறு கோரியும் எதிர்க்கட்சிகளினால் தயாரிக்கப்பட்ட விசேட பிரேரணை நேற்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வழிகாட்டலில் தயாரிக்கப்பட்ட இந்தப் பிரேரணையை, எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சபாநாயகரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தனர்.

எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த

07

## வியட்நாம் ஜனாதிபதி இன்று இலங்கைக்கு!

கொழும்பு, மே. 07

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பின் பேரில் வியட்நாம் ஜனாதிபதி இன்று வியாழக்கிழமை இரு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்புக்களை மேம்படுத்தி, பல துறைகளை உள்ளடக்கியதாக குறித்த அரச விஜயத்தின் போது சில புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்காக

07

## விஜய் பதவியேற்பில் ராகுலுக்கு அழைப்பு

சென்னை, மே. 07

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் இன்று முதலமைச்சராக பதவியேற்கவுள்ள நிலையில் இந்த நிகழ்வுக்கு காங்கிரஸ் தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அழைக்கப்பட்டுள்ளார்.

07

## கேப்பாபிலவு காணி உரிமையாளர்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசு!

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே. 07

கேப்பாபிலவு காணிகளின் உரிமையாளர்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு - கேப்பாபிலவு பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள சுமார் 170 ஏக்கர் காணிகளை விடுவிப்பதில் நிலவும் தாமதங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சு விளக்கம் அளித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இராணுவ முகாம் அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட இந்தக் காணிகளை விடுவிக்கக் கோரி, அப்பகுதி

07

## சொகுசு பஸ் -மோட்டார் சைக்கிள் மோதி புங்குடுதீவு இளைஞன் பலி!



யாழ்ப்பாணம், மே. 07

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றின் சொகுசு பஸ் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரை மோதித் தள்ளியதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் வேலணை, புங்குடுதீவு மடத்துவெளி பகுதியில் இடம்பெற்றது.

இந்த விபத்தின்போது 10 ஆம்

07

## இலங்கையில் அரச நிறுவனங்களை நவீனமயமாக்க உலக வங்கி ஆதரவு!

கொழும்பு, மே. 07

உலக வங்கியின் இலங்கைக்கான முகாமைப்பாளர் கெவர்க் சர்க்ஸியன் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் நேற்றுக் காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவைச் சந்தித்தனர்.

வருமானம் ஈட்டும் அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் பணிகள் மற்றும் அரச ஊழியர்களின் நேர்மையைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

07

## பல்கலை அனுமதி செப்ரெம்பரில்!

கொழும்பு, மே. 07

2025/2026 கல்வி ஆண்டுக்காக அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்து கொள்ளும் நடவடிக்கைகள் செப்ரெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என பிரதமர் ஹரிணி

07

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசியல் மாற்றம் ஈழத் தமிழர்களின் போராட்டத்துக்கு புதிய வலுவை தரவேண்டும்

## விஜய்க்கு அனுப்பிய வாழ்த்து செய்தியில் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், மே. 07

"தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் மாற்றம், எமது அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு ஒரு புதிய வலுவைத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அந்தவகையில், ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு விவகாரத்தில் நீங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டும் என்றும், சர்வதேச அரங்கிலும் இந்திய மத்திய அரசாங்கத்திடமும் எமது நீதிக்கான குரலாக நீங்கள் ஒலிக்கவேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்."

-இவ்வாறு தமிழக தேர்தலில் பெரு வெற்றி ஈட்டிய தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்க்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அனுப்பி வைத்த வாழ்த்து செய்திய்யில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் புதிய சாதனையொன்றைப் படைத்து, மக்களின் பேராதரவோடு முதலமைச்சர் எனும் உயரிய பொறுப்பை ஏற்கவுள்ள உங்களுக்கு ஈழத் தமிழர்கள் சார்பாக எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த காலங்களில் தமிழ்நாட்டு மக்களும் தலைவர்களும் ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குப் பெரும் அரணாகத் திகழ்ந்திருந்ததுடன், ஈழ விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்றிருந்த தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் மீதும் எமது மக்கள் மீதும் அவர்கள் கொண்டிருந்த அளவற்ற அன்பும் வழங்கிய பேராதரவும் எமது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டவை.

அன்று எமது மக்களின் துயர்துடைக்க எவ்வாறெல்லாம் தமிழ்நாடு துணை நின்றதோ, அதே போன்றதொரு உறுதியான ஆதரவை உங்களிடமிருந்தும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இலங்கைத்தீவில் ஈழத் தமிழர்கள் நீண்டகாலமாகத் தங்களது தமிழ்த் தேச அங்கீகாரத்திற்காகவும், பாதுகாப்புக்காகவும் போராடி வருகின்றனர். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைப் பேரவலத்திற்குப் பிறகும் எமது மக்களின் அரசியல் அபிலாசைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் மாற்றம், எமது அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு ஒரு புதிய வலுவைத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அந்தவகையில், ஈழத் தமிழர்களின் அரசியல் தீர்வு விவகாரத்தில் நீங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றும், சர்வதேச அரங்கிலும் இந்திய மத்திய அரசாங்கத்திடமும் எமது நீதிக்கான குரலாக நீங்கள் ஒலிக்க வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். "தொப்புள்கொடி உறவுகள்" என்ற உணர்வோடு, எமது தாயகத்தின் விடியலுக்காக உங்கள் கரங்கள் நீளும் என்ற பெரும் எதிர்பார்ப்பும் எங்களுக்குண்டு- என்றுள்ளது. (அ)

# மின்சாரசபை அரச வங்கிகளிடம் பெற்ற கடன்கள் ரூ.11 பில்லியனுக்கும் அதிகம்!

## அமைச்சர் அநுர கருணாதிலக்க தகவல்

கொழும்பு, மே. 07

இலங்கை மின்சார சபை அரச வங்கிகளிடமிருந்து பெற்றுள்ள மொத்தக் கடன் தொகை 11 பில்லியன் ரூபாவிற்கும் அதிகம் என மின்சக்தி அமைச்சர் அநுர கருணாதிலக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பெறப்பட்ட இந்த கடன் தொகையை குறைப்பதற்கும், மின்சார சபையின் வங்கி சார்ந்த தங்கியிருப்பு நிலையை இல்லாது செய்வதற்கும் அரசாங்கம் முறையான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சார உற்பத்திச் செலவைக் குறைத்தல் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம், உண்மையான செலவைப் பிரதிபலிக்கும் வகையில் மின்சாரக் கட்டணக் கட்டமைப்பை உருவாக்குவதே தமது நோக்கம் என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மின்சார சபைச் சட்டம் நீக்கப்பட்டு, மின்சார சபை கலைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் உறுதிப்படுத்தினார்.

அதற்குப் பதிலாக மின் உற்பத்தி, விநியோகம் மற்றும் கட்டமைப்புச் செயல்பாடுகளுக்காக ஆறு புதிய நிறுவனங்கள் உத்தியோகபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மின்சக்தித் துறையின் நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துவதே இந்த மறுசீரமைப்பின் பிரதான இலக்கு என அமைச்சர் அநுர கருணாதிலக்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# நீதித்துறை மீதான நம்பிக்கையை சீர்குலைக்கிறார் ஜனாதிபதி அநுர!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே. 07

எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதி நீதிமன்றம் வழங்கவுள்ள தீர்ப்பு குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மே தினக் கூட்டத்தில் வெளியிட்ட கருத்து, நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கையைச் சீர்குலைக்கும் வகையில் அமைந்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனநாயகத்தின் அடித்தளமான நீதித்துறையின் சுதந்திரம், அரசியல் அமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வழங்கப்படவுள்ள தீர்ப்பு குறித்து ஜனாதிபதி முன்கூட்டியே சூசகமாகத் தெரிவிப்பது நீதித்துறைச் செயற்பாடுகளில் தலையிடுவதாக அமையும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகைய கருத்துக்கள் நீதித்துறையின் கௌரவத்தையும், தன்னாதிக்கத்தையும் கேள்விக்குறியாக்குவதாக சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நீதித்துறையின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போதெல்லாம் தாம் உறுதியாக நின்றதை நினைவூட்டியுள்ள அச்சங்கம், அரசியலமைப்பையும் சட்டத்தின் ஆட்சியையும் பாதுகாப்பதற்காக எவ்விதமான தலையீடுகளையும் தொடர்ந்தும் எதிர்க்கப் போவதாகத் தெரிவித்துள்ளது. (அ)

# கோணேச்சரம் வளாகத்தில் ராடர் அமைப்பு நிறுவப்படாது

## இலங்கை .விமானப்படை அறிவிப்பு

கொழும்பு, மே. 07

திருகோணமலையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேச்சரம் ஆயல வளாகத்தில் ராடர் அமைப்பை நிறுவும் திட்டங்கள் எதுவும் இல்லை என கடற்படை தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் உள்ள திருகோணேச்சேரம் ஆலய நிர்வாக சபையின் வாழ்நாள் உறுப்பினர் சி. ஜெயசங்கர், ராடர் அமைப்பை நிறுவுவதற்காக ஆலய நிலத்தின் ஒரு பகுதியை கடற்படை கோருவதாகத் தெரியவந்துள்ளதாக ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்தி குறித்து இலங்கை விமானப்படை ஒரு உத்தியோகபூர்வ நிலைப்பாட்டையும் விளக்கத்தையும் வெளியிட்டுள்ளது.

"திருக்கோணேச்சரம் ஆலய வளாகத்திலோ அல்லது அதைச் சுற்றியோ எந்தவொரு ராடர் அமைப்பையும் நிறுவ இலங்கை விமானப்படைக்கு எந்தத் திட்டமும் இல்லை. மேலும், இந்த நோக்கத்திற்காக எந்த நிலத்தையும் கையகப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்பதை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்," என விமானப்படையின் ஊடகப் பணிப்பாளர் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை விமானப்படை, நாட்டின் வரலாற்று மற்றும் சமயத் தலங்களின் புனிதத்தையும் பாரம்பரியத்தையும் எப்போதும் மதித்து வந்துள்ளது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நிலத்தில் அபிவிருத்திப் பணிகளையோ அல்லது இராணுவக் கட்டமைப்புகளையோ மேற்கொள்ளும் நோக்கம் விமானப்படைக்கு இல்லை.

மேலும், எந்தவொரு உத்தியோகபூர்வ விசாரணையுமின்றி இதுபோன்ற பொய்ச் செய்திகளை வெளியிடுவது, அப்பகுதி மக்களிடையே தேவையற்ற அமைதியின்மையை ஏற்படுத்துவதோடு, விமானப்படை மீது ஒரு தவறான மனப்பான்மையையும் உருவாக்கும் வாய்ப்புள்ளது, என அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நாட்டுக்கு திரும்பினார் மாலைதீவு ஜனாதிபதி!

கொழும்பு, மே. 07

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துகொண்டு, மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு உள்ளிட்ட தூதுக்குழுவினர் நேற்று முற்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

மாலைதீவு-இலங்கை இடையிலான நட்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தி, இரு நாட்டு மக்களுக்கும் பல நன்மைகளை பெற்றுத்தரும் வகையில், மாலைதீவு ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினரின் இந்த இலங்கை விஜயம் வெற்றிகரமாக அமைந்திருந்தது.

மாலைதீவு ஜனாதிபதி இந்நாட்டுக்கு வருகை தந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். பரஸ்பரம் முக்கியத்துவம் வாய்ந்த பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதன் மூலம் இந்த விஜயம் வெற்றிகரமாக அமைந்தது. (அ)

# சுங்கத் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நாயகம்!

கொழும்பு, மே. 07

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக விமல் எஸ்.கே. லியனகமவை நேற்று முன் தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இலங்கை நிர்வாக சேவையின் சிறப்புத் தர அதிகாரியான லியனகம, தற்பொழுது நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றி வருகிறார்.

நேற்று முன் தினம் வரை சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றி வந்த சீவலி அருகொடவின் பதவிக்காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இவரது நியமனம் நிகழ்ந்துள்ளது.

இந்த நியமனத்திற்கான முன்மொழிவை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நிதி அமைச்சர் என்ற தகுதியில் முன்வைத்து அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றார். (அ)

# மோசடிகளில் ஈடுபடும் வெளிநாட்டவர்களுக்கு வீடுகள், கட்டடங்கள் வழங்கினால் நடவடிக்கை

கொழும்பு, மே. 07

இலங்கையில் தங்கியிருந்து இணையவழி நிதி மோசடிகளில் ஈடுபடும் வெளிநாட்டவர்களுக்கு வீடுகள் மற்றும் கட்டடங்களை வாடகைக்கு வழங்கும் உள்நாட்டு உரிமையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மைக் காலமாக சீனா, வியட்நாம், மலேசியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் இணைய மோசடி மற்றும் விஸா விதி மீறல் குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டு வரும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வூட்லர், மோசடி கும்பல்கள் இயங்கிய வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் ஹோட்டல்களின் உரிமையாளர்கள் அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன், அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் என்றும் குறிப்பிட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
07.05.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# நமது தமிழ் அரசியல்வாதிகள் விஜய்யிடம் விடுக்கும் வேண்டுகோள்

"இலங்கை தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வைக் காண்பதற்கான பயணத்தில் உங்களது தலைமையிலான அரசாங்கம் முன்னின்று ஒத்துழைப்பு வழங்க வேண்டும்."

"தமிழ்நாட்டின் புதிய அரசாங்கத்துடனும் மாநில மக்களுடனும் இணைந்து தமிழர் பிரச்சினை விவகாரங்களில் ஆக்கபூர்வமாக பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறோம்."

"இலங்கை தமிழ் மக்களுக்கு தமிழ்நாட்டு மக்களினதும் புதிதாக அமையவிருக்கும் அரசாங்கத்தினதும் ஆதரவு தொடர்ந்து கிடைக்க வேண்டும்."

"விஜய் தனது ஆட்சிக் காலத்தில் இந்திய அரசாங்கத்தைக் கொண்டு இலங்கை தமிழர் பிரச்னையை தீர்த்து வைக்க வேண்டும்."

சட்டசபை தேர்தலில் அறுதிப் பெரும்பானமை ஆசனங்களைக் கைப்பற்ற முடியாத நிலையில் எவ்வாறு அரசாங்கத்தை அமைப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கும் தமிழக வெற்றி கழகக் தலைவர் விஜய்யின் தேர்தல் வெற்றியை வாழ்த்திய வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் அரசியல்வாதிகள் சிலர் விடுத்த வேண்டுகோள்கள் இவை.

அறுதிப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்காவிட்டாலும், கட்சியை தொடங்கி இரு வருடங்கள் கூட நிறைவடையாத நிலையில் விஜய் கண்ட வெற்றியில் பல சாதனைகள் உள்ளன. அவருக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கும் எமது தமிழ் அரசியல்வாதிகள் இலங்கை தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு முன்னைய தமிழ்நாட்டு அரசாங்கங்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் கோரிதைப் போன்று விஜய்யிடமும் தங்களது எதிர்பார்ப்புக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

கச்சதீவை மாத்திரமல்ல, யாழ்ப்பாணத்தையும் தமிழ்நாட்டுக்கு கொடுத்து விடுங்கள் என்றும் பாராளுமன்றத்தில் ஒரு குரல் ஒலித்தது. இது யாழ்ப்பாண மக்களில் ஒரு பிரிவினர் தங்களுக்கு தாங்களே வைத்த சூனியத்தின் விளைவு…!

எங்களால் முடியாத காரியங்களுக்கு மற்றவர்களின் உதவியை எதிர்பார்ப்பது இயல்புதான். ஆனால், எங்கள் சொந்தத்தில் நடைமுறைச் சாத்தியமான எந்த முயற்சியையும் முன்னெடுக்காமல் மற்றவர்கள் மீது நம்பிக்கை வைத்து கோரிக்கைகளை விடுப்பதையே பிரதான தந்திரோபாயமாக கொண்டிருப்பதுதான் தவறு.

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 17 வருடங்கள் நிறைவடையும் நிலையிலாவது எமது தமிழ் அரசியல்வாதிகள் இதுவரையிலான அரசியல் பயணத்தின் பயனற்ற தன்மையைப் புரிந்துகொள்வார்களோ தெரியவில்லை.

தமிழ்நாட்டு அரசியலில் இன்று இலங்கை தமிழர் பிரச்சினை அக்றைக்குரிய விவகாரமாக இல்லை என்ற யதார்த்தத்தை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர், கூட்டாட்சி முறையின் அடிப்படையில் அரசியல் தீர்வைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதிய பிறகு தி.மு.க. தலைவரும் முன்னாள் முல்வருமான மு.க. ஸ்டாலின் எமது பிரச்சினை பற்றி ஒருபோதும் பேசவில்லை.

தமிழகத்தில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று தேர்தல் பிரசாரங்களில் ஒரு தடவை கூறியதை தவிர, விஜய்யும் எமது பிரச்சினை குறித்து பெரிதாக பேசவில்லை. எமது பிரச்சினையை பிரதானமாக முன்னிலைப்படுத்தி அரசியல் செய்த மறுமலர்ச்சி தி.மு.க. தலைவர் வைகோ, ஸ்டாலினின் பேச்சாளர் போன்று குறுகிப்போய் நிற்கிறார்.

பிரபாகனினதும் பாயும் புலியினதும் படங்களையும் காட்சிப்படுத்தி அரசியல் செய்த நாம் தமிழர் சீமான் ஏற்கெனவே இருந்த மக்கள் ஆதரவையும் இழத்து நிற்கிறார். விடுதலை சிறுத்தைகளின் தலைவர் தொல்.திருமாவளவனும் பிரசாரங்களின்போது எமது பிரச்சினையில் கவனம் செலுத்தவில்லை.

எமது பிரச்சினையை தேர்தல் பிரசாரங்களில் கூட தமிழக அரசியல் கட்சிகள் பேசுவதற்கு அக்கறை காட்டாத ஒரு காலகட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம். இந்த இலட்சணத்தில் விஜய்யிடம் விடுக்கப்படும் வேண்டுகோள்களை என்னவென்று வர்ணிப்பது என்றே தெரியவில்லை. "கில்லி" சொல்லியடிக்க இலங்கைத் தமிழர் பிரச்சினை ஒன்றும் சினிமாக் காட்சியில்லை.

# "சமாதான நடைப்பயணத்தை அடுத்து அரசியல் ரீதியான தொடர் நடவடிக்கைகள் அவசியம்"

**இலங்கையில் நல்லிணக்கம் என்பது ஒரு நீண்ட கால சவாலானது என்பதை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, இந்த நேர்மறையான பிரதிபலிப்பை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. ஏழு தசாப்தங்களுக்கும் மேலான அரசியல் மோதல்கள், இனத் துருவமுனைப்பு, வன்முறை மற்றும் அவநம்பிக்கை ஆகியவற்றை அடையாளபூர்வமான நிகழ்வுகளால் மட்டும் முறியடிக்க முடியாது.**

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

வியட்நாமைச் சேர்ந்த பௌத்த பிக்கு வண. திச் பஞ்ஞாகார தலைமையில் ஏப்ரல் 21 முதல் 28 வரை இலங்கையில் இடம் பெற்ற சர்வதேச சமாதான நடைப் பயணத்தின் நிறைவானது, நாட்டில் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் சகவாழ்வின் முக்கியத்துவம் குறித்து நாடு முழுவதும் பெரும் ஆர்வத்தை தூண்டியிருப்பதுடன் கலந்துரையாடல்களுக்கு களம் அமைத்திருக்கிறது.

பல்வேறு மத மற்றும் இனச் சமூகங்களைச் சேர்ந்த மக்கள் இந்த நடைப்பயணத்திற்கு வழங்கிய ஆதரவும் நல்வரவேற்பும் உரையாடல், நிதானம் மற்றும் பரஸ்பர மரியாதையை ஊக்குவிக்கும் முன்முயற்சிகளுக்கு சமூகத்தில் அதிக இடம் இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் என்பது ஒரு நீண்ட கால சவாலானது என்பதை ஏற்றுக்கொள்ளும் அதே வேளை, இந்த நேர்மறையான பிரதிபலிப்பை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது. ஏழு தசாப்தங்களுக்கும் மேலான அரசியல் மோதல்கள், இனத் துருவமுனைப்பு, வன்முறை மற்றும் அவநம்பிக்கை ஆகியவற்றை அடையாளபூர்வமான நிகழ்வுகளால் மட்டும் முறியடிக்க முடியாது.

நிலையான நல்லிணக்கத்திற்குத் தொடர்ச்சியான அரசியல் ஈடுபாடு, நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் மற்றும் சமூகங்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதற்கான சீரான முயற்சிகள் அவசியமாகும். அதிகாரப் பகிர்வு, சமத்துவம், பிரதிநிதித்துவம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுடன் தொடர்புடைய அடிப்படை அரசியல் பிரச்சினைகளை, நல்லிணக்கம் அர்த்தமுள்ள வகையில் முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் காலவரையன்றி ஒத்திவைக்க முடியாது.

இத்தகைய சூழலில், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது மேன் மேலும் முக்கியத்துவமானதாகிறது. இந்தத் தேர்தல்களுக்காக எதிர்க்கட்சிகளினாலும் சிவில் சமூக அமைப்புகளினாலும் முன்வைக்கப்படும் கோரிக்கை, அதிகாரப் பகிர்வு மற்றும் உள்ளூர் பிரதிநிதித்துவத்துடன் தொடர்புடைய ஜனநாயக நிறுவனங்கள் புத்துயிர் பெற வேண்டும் என்ற பரந்த அக்கறையைப் பிரதிபலிக்கிறது.

இந்தத் தேர்தல்களை நடத்துவதில் நிலவும் தொடர்ச்சியான தாமதம், குறிப்பாக மோதலினால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சகல தரப்புகளையும் உள்ளடக்கிய நிர்வாகத்திற்கான வாய்ப்புகளை கட்டுப்படுத்துகிறது. எனவே, அதிகாரப் பகிர்வு மற்றும் ஜனநாயகப் பங்கேற்பு குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சமூகங்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.

ஆகவே, சமாதான நடைப் பயணத்தை ஒரு முடிவாகவோ அல்லது ஒரு தனியான நிகழ்வாகவோ கருதாமல், ஒரு பெரிய தேசிய செயன்முறைக்குள் ஒரு பங்களிப்பாகவே பார்க்க வேண்டும். எதிர்கால சமாதான முயற்சிகளில் சிவில் சமூக அமைப்புகள், மதங்களுக்கிடையிலான குழுக்கள், இளைஞர் அமைப்புகள், கல்வியாளர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் பரந்தளவிலான பங்கேற்பு இருக்க வேண்டும்.

குறிப்பாக, போரின் தாக்கம் பொதுமக்களின் மனப்பான்மையையும் அரசியல் யதார்த்தங்களையும் தொடர்ந்து வடிவமைத்து வரும் வடக்கு, கிழக்கோடு வலுவான ஈடுபாட்டைக் கொண்டிருக்க வேண்டும். நாடு மிகவும் நிலையானதும் அமைதியானதுமான எதிர்காலத்தை நோக்கி நகர வேண்டுமானால், உரையாடல், ஜனநாயகப் பங்கேற்பு மற்றும் அரசியல் ரீதியில் சகல பிரிவுகளையும் அரவணைக்கும் உணர்வு ஆகியவற்றிற்கான தொடர்ச்சியான முயற்சிகள் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் ஆதாயமும் உண்டு. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவை.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய்வழி ஆதரவு பெருகும். சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்து வந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும்.

**விருச்சிகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது நட்பு மலரும். அலுவலகத்தில் மரியாதை கூடும். தடைகள் உடைபடும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
கணவன் மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை கூடும். இனிமையான நாள்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# ஊழல் விசாரணைகள் தீவிரம்: வழக்கு தாக்கல் செய்யப்படும்

## விசாரணைகளுக்கு தயாராகுங்கள்- நீதி அமைச்சர் ஹர்ஷன எச்சரிக்கை

கொழும்பு, மே 07

மகிந்த - கோட்டாவின் காலத்தில் ஊழல் மோசடி பற்றி பேசாமல் கட்டிலுக்கு அடியில் மறைந்திருந்த எதிர்க்கட்சியினர் இன்று ஊழலுக்கு எதிரானவர்களை போல் பேசுகிறார்கள். கடந்த கால ஊழல் பற்றி விசாரணைகளை தற்போது துரிதப்படுத்தியுள்ளதால் இவர்கள் திணறுகிறார்கள். போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். நாட்டு மக்கள் அரசாங்கத்தின் மீது அச்சம் கொள்ளவில்லை. ஊழல்வாதிகளும், படுகொலையாளிகளும் தான் அரசாங்கத்தின் மீது அச்சமடைந்துள்ளார்கள். முறையான வழக்குகள் தாக்கல் செய்யப்படும். விசாரணைகளுக்கு தயாராகுங்கள்- திணற வேண்டாம். நீதிமன்றம் செல்லுங்கள் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர் அரசமுறை கடன் மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அதிகாரத்துக்காக பிணத்தை கூட விற்கும் நிலைக்கு எதிர்க்கட்சியினர் தள்ளப்பட்டமை கவலைக்குரியது. அரசியல் நோக்கங்களுக்காக உண்மைகளை திரிவுபடுத்தி பேசுகிறார்கள். 2.5 மில்லியன் டொலர் மோசடியை அரசாங்கம் மறைக்கவில்லை. இந்த மோசடியின் உண்மையை அறிவதற்காகவே பல தரப்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திருடர்கள் தம்மை திருடர்கள் என்று ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எதிர்க்கட்சியின் திருடர்கள் தமது ஊழலை சமப்படுத்த அரசாங்கத்தின் மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். முறையான விசாரணைகளை மேற்கொண்டுள்ள நிலையில், சிதறியுள்ள எதிர்க்கட்சியின் ஊழல்வாதிகள் ஒன்றிணைந்து குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

2. 5 மில்லியன் டொலர் மோசடி விவகாரத்தை ஏன் பகிரங்கப்படுத்தவில்லை என்று தற்போது கேட்கிறார்கள். உண்மையை கண்டறியும் நோக்கம் இவர்களுக்கு இல்லை. அரசியல் செய்வதற்கு ஏன் இதனை முன்கூட்டியே அறிவிக்கவில்லை என்றே கருதுவார்கள்- என்றார்.

# உலக சந்தையில் 2ஆவது நாளாக கச்சா எண்ணெய் விலை சரிவு

கொழும்பு, மே 07

உலக சந்தையில் கச்சா எண்ணெயின் விலை நேற்று இரண்டாவது நாளாகவும் வீழ்ச்சியடைந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரானுடனான போர்ச் சூழலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமைதி உடன்படிக்கையை எட்ட முடியும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுத்த அறிக்கையை தொடர்ந்து, இவ்வாறு கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இருந்து மீண்டும் தடையின்றி எண்ணெய் விநியோகம் ஆரம்பமாகும் என்ற எதிர்பார்ப்பு இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இதன்படி, பிரெண்ட் வகை கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய் விலை 1.52 டொலர் வீழ்ச்சியடைந்து 108.35 டொலராகப் பதிவாகியுள்ளது.

அமெரிக்காவின் வெஸ்ட் டெக்சாஸ் இன்டர்மீடியட் வகை கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய் 1.50 டொலர் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அதன் புதிய விலை 100.77 அமெ ரிக்க டொலர்களாக காணப்பட்டது.

இவற்றுக்கு மேலதிகமாக, மர்பன் வகை கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய் விலை 105.97 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. (எ)

# மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரை கடல் பிராந்தியங்களில் கடும் காற்று வீசும்

கொழும்பு, மே 07

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோமீற்றர் வேகத்தில் தென் மேற்கு திசையிலிருந்து காற்றுவீசும்.

புத்தளம் தொடக்கம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான அத்துடன் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 40 - 45 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அதிகரித்த மழைவீழ்ச்சி காணப்படும்

கொழும்பு, மே 07

அயன அயல் ஒருங்கல் வலயத்தின் தாக்கத்தின் காரணமாக இலங்கைக்கு மேலாக வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் தளம்பல் நிலை ஒன்று விருத்தியடைகின்றது. இதனால், அடுத்து வரும் சில தினங்களுக்கு நாடு முழுவதும் அதிகரித்த மழை வீழ்ச்சி காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறதென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லிமீற்றரிலும் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கம்மன்பிலவின் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை

## விசாரணைகளுக்காக அழைக்கப்படுவார் - பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 07

திறைசேரியின் உதவிப் பணிப்பாளர் ரங்க ராஜபக்ஷவின் மரணம் தொடர்பில் உதய கம்மன்பில வெளியிட்டுள்ள கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை எனவும், இது குறித்து வாக்கு மூலம் அளிப்பதற்காக அவர் விசாரணை அதிகாரிகளால் அழைக்கப்படவுள்ளாரெனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ். யு. வுட்லர் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரகுல படகும்புர பகுதியில் திறைசேரியின் வெளிநாட்டு வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளைத் திசை திருப்பும் வகையில் உதய கம்மன்பில கருத்து வெளியிட்டு வருவதாக அவர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதியமைச்சின் கீழ் உள்ள வெளிநாட்டு வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களில் ஒருவராகக் கடமையாற்றிய ரங்க ராஜபக்ஷ, மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பில் குளியாப்பிட்டிய பொலிஸார், குற்றப்புலனாய்வு பிரிவினர், அரச இரசாயன பகுப்பாய்வு பிரிவினர் மற்றும் தடயவியல் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த உயிரிழப்பு தொடர்பில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து, நீதிமன்ற உத்தரவின் பேரில் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட நான்கு சட்டவைத்திய அதிகாரிகளைக் கொண்ட விசேட நிபுணர் குழுவினரால் இம்மாதம் முதலாம் திகதி குளியாப்பிட்டிய போதனா மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அந்த அறிக்கையும் தற்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், விசாரணைகளுக்காக உயிரிழந்த நபர் பயன்படுத்திய கார், தொலைபேசி, சிம் அட்டைகள், வங்கிக் கணக்கு அட்டைகள் மற்றும் ஏனைய முக்கிய ஆவணங்கள் குளியாப்பிட்டிய பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில், கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, இந்த வழக்கு விசாரணைகளைத் திசை திருப்பும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். குறிப்பாக, உயிரிழந்த நபரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக அவரின் மனைவி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளதாக உண்மைக்குப்புறம்பான தகவலை அவர் ஊடகங்கள் முன்னிலையில் முன்வைத்துள்ளார்.

உதய கம்மன்பில தெரிவிக்கும் கருத்துக்களில் எந்தவித உண்மையும் இல்லை எனவும், அவர் விசாரணைகளைத் திசை திருப்பும் வகையில் இவ்வாறான கருத்துகளை வெளியிட்டுள்ளார். எதிர்வரும் நாட்களில் இது குறித்து வாக்குமூலம் அளிப்பதற்காக அவர் விசாரணை அதிகாரிகளினால் அழைக்கப்படவுள்ளார். அத்துடன், எதிர்வரும் வழக்கு விசாரணையின் போதும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியமளிப்பதற்கும் அவர் அழைக்கப்படுவார்- என்றார். (எ)

2. 5 மில்லியன் விவகாரம்:

# ஜனாதிபதி பாராளுமன்றத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும்

கொழும்பு, மே 07

திறைசேரியின் 2. 5 மில்லியன் டொலர் காணாமல் போயுள்ளமை தொடர்பில் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வந்து அது தொடர்பில் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற திறைசேரியின் 2. 5 பில்லியன் டொலர் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். மரணித்த அதிகாரியிடம் இந்த கொடுக்கல்- வாங்கல் தொடர்பில் இரகசிய சாட்சியங்கள் இருப்பதால், அதனை மறைக்கும் நோக்கில் அவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது இந்த மோசடியுடன் அவருக்கு தொடர்பு இருப்பதால், அவர் வெட்கப்பட்டு உயிரை மாய்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், மரண விசாரணை அறிக்கையில், அதிக இரத்தம் ஒட்டப்பட்டதால் மரணம் ஏற்பட்டதாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மாறாக அவர் தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்படவில்லை.

திறைசேரியின் பணம் தவறான மின்னஞ்சல் முகவரியில் வந்த வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தியதாலே இந்த தவறு இடம்பெற்றிருக்கிறது. மின்னஞ்சல் முகவரி ஒன்றை வாசித்து புரிந்துகொள்ள தெரியாத அதிகாரிகளை நிதி அமைச்சுக்கு நியமித்த, ஜனாதிபதி இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வந்து இடம்பெற்ற தவறுக்காக மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும்- என்றார். (எ)

# வேலி கட்டிய முதியவர் இயந்திரம் வெட்டி பலி!

## கட்டுகஸ்தோட்டையில் சம்பவம்

கொழும்பு, மே 07

கட்டுகஸ்தோட்டை, மாவில்மட பகுதியில் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த முதியவர் ஒருவர், கிரைண்டர் இயந்திரம் கழுத்தில் தாக்கியதில் ஏற்பட்ட பாரதூரமான காயம் காரணமாக உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றது.

உயிரிழந்தவர் மாவில்மட பகுதியைச் சேர்ந்த 66 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டார்.

உயிரிழந்த நபர் தனது வீட்டின் முன்பக்க பாதுகாப்பு வேலியை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக கிரைண்டர் இயந்திரம் அவரது கழுத்தில் வெட்டியது.

இதனால் ஏற்பட்ட கடுமையான காயம் காரணமாக அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# பாதாள குழு உறுப்பினர் ஒருவர் கைது

கொழும்பு, மே 07

ரி- 56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் மற்றும் மகசினுடன் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீனட்டியன பகுதியில், கெஹெல்பத்தர விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

மினுவாங்கொடை, ஹீனட்டியன பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட 54 தோட்டாக்கள் மற்றும் மகசீன் ஆகியவை வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள ஒரு குற்றவாளிக்கு சொந்தமானது எனத் தெரியவந்துள்ளது.

கட்டுநாயக்க பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# விவசாயிகளின் பிரச்னைகளுக்கு உடன் தீர்வு வழங்கப்படவேண்டும்

## இல்லையேல் போராட்டத்தில் இறங்குவார்கள் சபையில் சாணக்கியன் எம். பி. எச்சரிக்கை

கொழும்பு, மே 07

கிழக்கு மாகாண விவசாயிகள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சனைகளுக்கு அரசாங்கம் உடனடி தீர்வு வழங்கவேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், தீர்வு வழங்காவிட்டால், அரசாங்கத்துக்கு எதிராக விவசாயிகள் மீண்டும் வீதிக்கு இறங்குவார்கள். நாங்கள் அந்த போராட்டத்துக்கு ஆதரவளிப்போம் என்று எச்சரிக்கை விடுத்தார். (எ)

# தமிழர்கள் அரசியல் உரிமையை பெற விஜய் குரல்கொடுக்க வேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிகை

யாழ்ப்பாணம், மே 07

ஈழத்தமிழ் மக்கள் அரசியல் உரிமையை பெற்றுக்கொள்ளவதற்கு தமிழக முதலமைச்சராக இன்று பதவியேற்கவுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சி. ஜோசப் விஜய் குரல் கொடுக்க வேண்டும் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில்,

விஜய் தமிழக முதலமைச்சர் என்ற அடிப்படையில் ஈழத்தமிழ் மக்களுக்காக உரத்து குரல் கொடுப்பார் என்று நம்புகின்றோம்.

தமிழக சட்டமன்றத்தில் இரண்டாவது ,மூன்றாவது இடங்களை பெற்றுக்கொண்ட தி.மு.க., அ.இ.தி.மு.க. கட்சிகளுக்கும் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# முள்ளியவளையில் மாணவியின் சங்கிலியை அறுத்த இளைஞர்கள்

## கட்டுப்படுத்த தவறும் பொலிஸார்

முல்லைத்தீவு, மே 07

முள்ளியவளையில் உயர்தர வகுப்பு மாணவியின் தங்கச்சங்கிலியை அறுத்து கொண்டு இரு இளைஞர்கள் தப்பிச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பிற்பகல் 03. 30 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முள்ளியவளையிலிருந்து வற்றாப்பளைக்கு துவிச்சக்கர வண்டியில் வகுப்புக்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவியை இலக்குத்தகடு இன்றி விலைகூடிய மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த இரு இளைஞர்கள் குறித்த மாணவி அணிந்திருந்த சுமார் முக்கால் பவுண் தங்கச்சங்கிலியை அறுத்து கொண்டு தப்பிச் சென்றனர்.

இதே பகுதிக்கு அண்மித்த பகுதியில் கடந்த வாரமும் கடையில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருந்த பெண்ணொருவரின் ஒரு பவுண் தங்கச்சங்கிலி பறிக்கப்பட்ட சம்பவம் பதிவாகியிருந்தது. இதனால், தொடர்ச்சியாக இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் குறித்து பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதுவரை சம்பவங்களுடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படாத நிலையில், பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறிவருகின்றனர் என பொது மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அப்பகுதியில் உள்ள சி. சி. ரிவி காட்சிகளின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், உள்ளூர் இளைஞர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சந்தேகநபர்களை கண்டறியும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பஸ் நிழற்குடைகள் மற்றும் வீதிகளில் சந்தேகத்துக்கிடமான முறையில் திரியும் நபர்கள் மீது பொலிஸார் தீவிர ரோந்து கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (எ)

2. 5 மில்லியன் டொலர் செலுத்தலில்

# வெளிநாட்டு வள திணைக்களம் எவ்வாறு தொடர்புபட முடியும்?

கொழும்பு, மே 07

பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தவர் இலங்கை வரலாற்றில் முதன் முறையாக திறைசேரியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு நிதி முகாமைத்துவம் தொடர்பில் அனுபவம் கிடையாது. செயலாளருக்கும், பணிப்பாளர் நாயகத்துக்கும் துறைசார்ந்த அனுபவம் இல்லாவிடின் முரண்பாடுகளே தோற்றம் பெறும்.

சட்டத்தின் பிரகாரம் இரு தரப்பு கடன் பெறுகைக்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான பொறுப்பு மாத்திரமே வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கு உண்டு. 2.5 மில்லியன் டொலர் செலுத்தலில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் எவ்வாறு தொடர்புபட முடியும் என்று அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# கடையடைப்பு போராட்டம்

நுவரெலியா, மே 07

நோர்வூட் நகரில் புதிதாக திறக்கப்படவுள்ளதாகக் கூறப்படும் மதுபான சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுக்காலை அப்பகுதி வர்த்தகர்கள் கறுப்புக் கொடி கட்டி, கடையடைப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்த மதுபானசாலைக்கு நகர வர்த்தகர்கள் மட்டுமன்றி, பிரதேசவாசிகளும் தமது கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். (எ)

# அஸ்வெசும கொடுப்பனவால் கடும் தொழிலாளர் தட்டுப்பாடு

## தேயிலை உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி

கொழும்பு, மே 07

இலங்கையின் தேயிலை துறையானது தற்போது உரம் மற்றும் கடுமையான தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறது என்று தேசிய தேயிலைத்தோட்ட உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சமன் கீகனகே தெரிவித்தார்.

நாட்டில் சுமார் 5 இலட்சத்து 50,000 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டுள்ள போதிலும் தற்போதைய சூழலில் வருடாந்த உற்பத்தி 12 தொடக்கம் 15 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அரசாங்கத்தால் வழங்கப்படும் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு அதிகரிப்பைத் தொடர்ந்து தொழிலாளர்கள் பணியில் ஈடுபவதை தவிர்த்து மது அருந்துவதிலும், குடும்ப சண்டைகளில் ஈடுபடுவதாக பிராந்திய மட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கடுமையான தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக சில தொழிற்சாலைகள் நாளாந்த கொடுப்பனவை 3,000 ரூபாயாக உயர்த்தியுள்ள போதிலும் கொழுந்து பறிப்பதற்கு ஆள் பற்றாக்குறையால் தேயிலை செடிகள் அழிவடையும் நிலைக்கு தள்ளப்படுகின்றன.

தொடர்ந்து இவ்வாறான நிலை காணப்பட்டால் ஜூன், ஜூலை மாதங்களில் பல தேயிலை தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்படும். இது நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்தும்- என்றார். (எ)

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மலையக மக்கள் பாதுகாக்கப்படுவர்

## உரிமைகளும் பெற்றுக்கொடுக்கப்படும்

கொழும்பு, மே 07

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் மலையக மக்கள் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களுக்கான உரிமைகளும் பெற்றுக் கொடுக்கப்படும் என்று பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மலையக மக்கள் காலங்காலமாக உறிஞ்சப்பட்டு தொடர்ச்சியாக அவர்கள் மீது அடக்குமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுபோன்றே அண்மையில் காவத்தை பிரதேசத்தில் நீலகாமம் தோட்டத்தில் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தொழிலாளி ஒருவர் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக தோட்ட நிர்வாகத்திடம் அனுமதி கோரியிருந்த நிலையில் அது கிடைக்காத பட்சத்தில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்த இடம் ஒன்றில் அவர் குடிசை ஒன்றை கட்டியிருந்தார்.

இதன்போது மேற்படி தோட்ட நிர்வாகம் சட்ட ரீதியில் பொலிஸ் மூலமாக நடவடிக்கை எடுக்காமல், அவர்களிடமுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குழுவைக் கொண்டு, கட்டப்பட்டிருந்த சிறு வீட்டின் மீது தாக்குதலை நடத்தி அங்குள்ள தொழிலாளர்கள் மீதும் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை கேள்விப்பட்ட உடனேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நாம் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இவ்வாறான நடவடிக்கைகள் இன்று நேற்றல்ல. தொடர்ச்சியாக மலையக பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த சபையின் கவனத்துக்கு கொண்டு வருகின்றேன்.

குறிப்பாக கேகாலை, நுவரெலியா, பதுளை, கண்டி போன்ற பல்வேறு பகுதிகளிலும் தொழிலாளர்கள் தமக்கான குடியிருப்பு ஒன்றை நிர்மாணிக்கும் போதும் மலசல கூடம் ஒன்றை அமைக்கும்போதும் கூட தொடர்ச்சியாக அந்த மக்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளனர்.

இதுவரை காலமும் இது போன்ற சம்பவங்கள் மலையகப் பகுதியில் நடக்கும் போது அங்குள்ள அரசியல் தலைவர்கள் நேரடியாக அங்கு சென்று கண்காட்சியையே நடத்துவார்கள். ஆனால், இந்த முறை இரத்தினபுரி பகுதி சம்பவம் நடைபெற்று 8 மணித்தியாலங்களுக்குள் நாம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டோம். 9 பேர் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

நாம் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தோம்- என்றார்.

# துப்பாக்கி ரவைகள் மற்றும் சிறுத்தை தோல் கைப்பற்றல்

புத்தளம், மே 07

புத்தளம், அட்டவில்லுவ பகுதியில் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு சொந்தமான காணியில் விசேட அதிரடிப்படையினரும், வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் துப்பாக்கி ரவைகள் மற்றும் சிறுத்தை தோல் என்பன கைப்பற்றப்பட்டன.

இலங்கை விமானப்படையின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில், குருநாகல், நிதிகல, கருவலகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் மற்றும் புத்தளம் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த அதிகாரிகளும் இணைந்து இந்த சுற்றிவளைப்பை முன்னெடுத்தனர்.

இதன்போது, பதப்படுத்தப்பட்ட பெரிய சிறுத்தை தோல், புள்ளிமான் தோல் ஒன்று மற்றும் 09 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

சம்பவ இடத்தில் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். விசாரணையின்போது, தான் இந்தக் காணியை முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடமிருந்து குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருவதாக அவர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலங்கை - இந்தியா...

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக் கும் இடையிலான தூரம் சுமார் 30 கிலோமீற்றர் மட்டுமே.

இருப்பினும், நேரடிச் சாலை இல்லை. ரயில் பாதை இல்லை. பெரிய அளவில் இயங்கும் படகு சேவை இல்லை. மின்சாரக் கட்டமைப்பு இணைப்பு இல்லை. குழாய்வழித் தொடர்பு இல்லை. வெளிப்படையாகச் சொல்வதானால், இது ஒரு முரண்பாடான நிலை. இரண்டு அறைகளுக்கும் பொதுவான சுவரிலேயே, அந்த இரண்டு அறைகளுக்கு இடையில் ஒரு கதவை அமைக்க முடியும் என்றபோதிலும், அருகருகே உள்ள இரண்டு அறைகளை வெளியே உள்ள ஒரு நடைபாதை வழியாக மட்டுமே இணைப்பது போல இது உள்ளது.

பாக் ஜலசந்தியின் குறுக்கே ஒரு பாலம் அல்லது சுரங்கப்பாதை வழியாக தரைவழி இணைப்பு ஏற்படுத்துவது குறித்து பல தசாப்தங்களாக விவாதிக்கப்பட்டு வருகின்றது. உலகம் முழுவதும் இதுபோன்ற வழித்தடங்களுக்குப் போதுமான எடுத்துக்காட்டுகள் உள்ளன. அதன் பொறியியல் நன்கு அறியப்பட்டுள்ளது.

அதன் பொருளாதாரம் கவர்ச்சிகரமானது. இது போன்ற பாலங்கள் எங்கு கட்டப்பட்டிருந்தாலும், அதன் நன்மைகள் மறுக்க முடியாதவை. ஆனால் நாம் தொடர்ந்து தயங்குகின்றோம். ஆனால் நான் தெளிவாகச் சொல்கின்றேன், தயக்கம் காட்டிக் கொண்டிருப்பதற்கான காலம் முடிந்துவிட்டது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒரு நிரந்தர இணைப்பு, இந்தப் பிராந்தியம் முழுவதின் பொருளாதாரப் புவியியலையும் மாற்றியமைக்கும். எந்தவொரு துறைமுக விரிவாக்கமோ அல்லது விமான நிலைய மேம்பாடோ தனியாக அடைய முடியாத வகையில், இலங்கையை அது விரும்பும் ஒரு மையமாக இந்த ஒழுங்கு மாற்றும் - என்றார். (அ)

## தமிழக வெற்றி...

இந்த நிலையில், மதச்சார்பற்ற, முற்போக்கான மற்றும் மக்கள் நலன் சார்ந்த அரசியலுக்கு ஆதரவளிப்பது கட்சியின் கடமை என்பதால், முழுமையான ஆதரவை வழங்க முடிவு செய்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளாத, வகுப்புவாத சக்திகளுடன் கூட்டணி வைக்கக் கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டே இந்த ஆதரவு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உடன்படிக்கையானது தற்போதைய அரசாங்கத்தை அமைப்பதுடன் நின்றுவிடாமல், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவை தேர்தல்களுக்கும் பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராஜரின் பொற்கால ஆட்சியை மீண்டும் கொண்டுவருவதற்கும், தந்தை பெரியாரின் சமூக நீதி மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் அரசியலமைப்பு இலட்சியங்களை நிலைநிறுத்துவதற்கும் இந்த கூட்டணி பாடுபடும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை,

தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) தலைவர் விஜய், இன்று வியாழக்கிழமை தமிழக முதலமைச்சராகப் பதவியேற்கிறார்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இந்தப் பதவியேற்பு விழா மிகப்பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளது. இன்றைய தினத்தில் அமைச்சர்களும் பதவியேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்று நடைபெறவுள்ள இந்தப் பிரம்மாண்ட பதவியேற்பு விழாவுக்கு, பல்வேறு மாநிலங்களின் அரசியல் தலைவர்கள் மற்றும் பிரபலங்கள் கலந்துகொள்ள வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## வித்தியா படுகொலை...

நிறைவுக்கு வந்தது. பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன தலைமையிலான ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம், இந்தத் தீர்ப்பை வழங்கியது. இதன் போது, சிறைச்சாலையில் உள்ள குற்றவாளிகள் 'சூம்' தொழில்நுட்பம் ஊடாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

2015ஆம் ஆண்டு மே மாதம் புங்குடுத்தீவு மகா வித்தியாலய மாணவியான வித்தியா கடத்திச் செல்லப்பட்டு, கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இந்த வழக்கை விசாரித்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் 'ட்ரயல் அட்பார்' நீதிபதிகள் குழாம், சுவிஸ் குமார் உள்ளிட்ட 7 பேரை குற்றவாளிகளாகக் கண்டு அவர்களுக்கு மரண தண்டனை விதித்தது.

மேல் நீதிமன்றின் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்ட நிலையில், விசாரணைக் காலத்தில் குற்றவாளிகளில் ஒருவர் சிறைச்சாலையில் இருந்தபோது உயிரிழந்தார்.

அதேவேளை, மேன்முறையீட்டு விசாரணைகளின் அடிப்படையில், மேலும் இரு பிரதிவாதிகளைத் தண்டனையிலிருந்து விடுவிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

முக்கிய குற்றவாளியான சுவிஸ் குமார் எனப்படும் மகாலிங்கம் சசிகுமார் உள்ளிட்ட எஞ்சிய நான்கு பேருக்குமான மரண தண்டனையை உயர்நீதிமன்றம் நேற்று உறுதிப்படுத்தியது. (அ)

# அஸ்வெசும நிதியிலும் முறைகேடு! உடனடி விசாரணைகள் வேண்டும்!!

## "சுதந்திர சட்டத்தரணிகள்" கோரிக்கை

கொழும்பு, மே. 07

நலன்புரி நன்மைகள் சபை ஊடாக ரூ.5,000 இற்கும் சற்று குறைவான தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக "சுதந்திர சட்டத்தரணிகள்" அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக நிதிச் செலுத்துகை குறித்து பாராளுமன்றம் ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள குறித்த கடிதத்தில், தடுப்பு மற்றும் சமநிலை முறைமையின்றி அரச நிதியைப் பயன்படுத்துவது குற்றச் செயல், ஊழல் மற்றும் மோசடி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசியலமைப் பின் 148ஆவது உறுப்புரை யின் கீழ் நிதி அதிகாரம் கொண்ட பாராளுமன்றம் பின்வரும் கேள்விகளுக்கு உடனடியாகப் பதில்களைத் தேடவேண்டும் எனவும் "சுதந்திர சட்டத்தரணிகள்" அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நலன்புரி நன்மைகள் சபை ஊடாக ரூ. 5,000 இற்கும் சற்று குறைவான தொகை மேலதிகமாகச் செலுத்தப்ப ட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து பாராளுமன்றத்தின் ஊடாக முறையான விசாரணை நடத் தப்பட வேண்டும் என "சுதந் திர சட்டத்தரணிகள்" அமைப்பு வலியுறுத்துகிறது. (அ)

## சபையில் விவாதம்...

கருணாதிலக தலைமையில் சென்ற குழுவில், ஜே. சி.அலவதுவல, அஜித் பி. பெரேரா உள்ளிட்ட எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

அண்மைக் காலமாக நீதித்துறையின் செயற்பாடுகள் மற்றும் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புகள் குறித்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் வெளியிடப்படும் கருத்துக்கள், நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்த விவகாரம் ஜனநாயகத்தின் அடிப்படைத் தூண்களைப் பாதிக்கும் என்பதால், இது குறித்து பாராளுமன்றத்தில் முழுமையான விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று இந்தப் பிரேரணை ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## வியட்நாம் ஜனாதிபதி...

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் வியட்நாம் கலாச்சார, விளையாட்டு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கும் இடையில் தகவல் மற்றும் தொடர்பாடல் துறையின் ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சு மற்றும் வியட்நாம் கலாச்சார, விளையாட்டு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கும் இடையில் கலாச்சார ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது.

புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சு மற்றும் வியட்னாம் இனத்துவ மற்றும் சமய விவகார அமைச்சுக்கும் இடையில் சமய அபிவிருத்தி, சமய மாணவர் நலனோம்புகை, சமய நம்பிக்கை, சடங்கு சம்பிரதாயங்கள் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது.

விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு மற்றும் வியட்னாம் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சுக்கும் இடையில் விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப துறைகளில் ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவுள்ளது. (அ)

## விஜய் பதவியேற்பில்...

தமிழகத்தில் ஆட்சியமைக்க த.வெ.கவுக்கு காங்கிரஸ் ஆதரவு தெரிவித்து புதிய கூட்டணியை அறிவித்துள்ள நிலையில், தமிழக காங்கிரஸ் தேர்தல் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், தமிழக காங்கிரஸ் குழுத் தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் நேற்று பனையூர் அலுவலகத்தில் த.வெ.க. தலைவர் விஜயைச் சந்தித்தனர்.

தமிழக காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் 5 பேரின் ஆதரவுக் கடிதத்தையும் விஜயிடம் வழங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்தித்து ஆட்சி உரிமை கோரினார் த.வெ.க. தலைவர் விஜய். (அ)

## கோப்பாய்பிலவு...

மக்கள் நீண்ட காலமாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர, காணிகளின் உரிமையாளர்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

சுமார் 15 விண்ணப்பதாரர்களின் காணி உரிமை தொடர்பான ஆவணங்கள் உறுதிப்படுத்தப்பட்டதும், அந்த நிலங்கள் பாதுகாப்பாக மீள ஒப்படைக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

குறித்த நிலப்பரப்பில் முன்னர் இருந்த பாடசாலைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற பொது வசதிகளை மீண்டும் அமைப்பது குறித்து, காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னரே பரிசீலிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னரும் தமது நில மீட்பு கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை எனக் கவலை தெரிவித்துள்ள கேப்பாபிலவு மக்கள், தமது பூர்வீக நிலங்களை உடனடியாக விடுவிக்கக் கோரி அண்மையிலும் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சொகுசு பஸ்...

வட்டாரம், புங்குடுதீவைச் சேர்ந்த 21 வயதுடைய சிறிரமணன் நிதுசன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## இலங்கையில் அரச...

அரசின் வருமானம் ஈட்டும் நிறுவனங்களின் மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், அதற்காக உலக வங்கியின் ஆதரவை வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கலுக்காக ஜனாதிபதி செயலகத்தில் நிறுவப்பட்டுள்ள ' பொது நிர்வாகம், மறுசீரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் பணியகத்தின்' செயல்பாடுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. எதிர்காலத்தில் இந்த நிறுவனத்துடன் உலக வங்கி இணைந்து பணியாற்றுவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

மேலும், அரச நிறுவனங்களின் அதிகாரிகளின் நேர்மையைப் பேணுவதற்காக நிறுவப்பட்டுள்ள 'உள்ளக விவகாரப் பிரிவு' சார்ந்த வேலைத்திட்டங்களில் உலக வங்கி பிரதிநிதிகள் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது மேலதிகமாகக் கலந்துரையாடப்பட்டது.

உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் கெவர்க், சிரேஷ்ட பொருளாதார நிபுணர்களான ரிச்சர்ட் வோக்கர், அந்தனி ஒபேசேகர மற்றும் நிர்வாக விசேட நிபுணர் டில் ஹார்ட்மேன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

## பல்கலை அனுமதி...

அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கமைய, பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டதன் பின்னர், அனைத்து மாணவர் பதிவுப் பட்டியல்களையும் 2026 ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் உரிய பல்கலைக்கழகங்களுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2026 செப்ரெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து கற்கைநெறிகளை ஆரம்பிக்கும் குறிப்பிட்ட திகதிகள், அந்தந்தப் பல்கலைக்கழகங்களினால் தீர்மானிக்கப்படும் எனவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# விஜய் ஆட்சி அமைக்க காங்கிரஸ் கட்சி ஆதரவு

## நிபந்தனையுடன் முக்கிய முடிவு

சென்னை, மே. 07

தமிழக அரசியலில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (த.வெ.க.) ஆட்சி அமைக்க காங்கிரஸ் கட்சி ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாடு காங்கிரஸ் அரசியல் விவகாரங்கள் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நள்ளிரவில் காணொளி மூலமாக நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கூட்டத்தில், தமிழகத்தில் விஜய் தலைமையில் ஆட்சி அமைவதற்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

எனினும், இந்த ஆதரவுக்கு காங்கிரஸ் கட்சி ஒரு முக்கிய நிபந்தனையை முன்வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதாவது, பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க.) அல்லது அதன் கூட்டணியில் உள்ள கட்சிகளின் ஆதரவை எக்காரணம் கொண்டும் த.வெ.க. பெறக்கூடாது என்பதே அந்த நிபந்தனையாகும்.

மேலும், மதச்சார்பற்ற கொள்கையுடைய கட்சிகளின் ஆதரவுடன் மட்டுமே ஆட்சி அமைக்கவேண்டும் என்றும், வகுப்புவாத சக்திகளைத் தவிர்த்து அரசியல் ஒற்றுமையை நிலைநிறுத்தவேண்டும் என்றும் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த திடீர் அரசியல் நகர்வு தமிழக அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும், இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழகத்தின் தரப்பிலிருந்து இதுவரை அதிகாரபூர்வமான பதில் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைச் சிறுவர்களிடையே அதிகரிக்கின்றது உடற்பருமன்

## நகர்ப்புறங்களில் 15 வீதமானோர் பாதிப்பு

கொழும்பு, மே. 07

இலங்கையின் நகர்ப்புறங்களில் வசிக்கும் பாடசாலை செல்லும் சிறுவர்களில் 10 முதல் 15 வீதம் பேர் அதிக எடை அல்லது உடற்பருமன் கொண்டவர்களாக இருப்பதாகச் சிறுவர் நல மருத்துவ நிபுணர் மகேஷக விஜயவர்தன கவலை தெரிவித்துள்ளார்.

உலகளவில் பொது சுகாதாரத்துக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ள சிறுவர் உடற்பருமன், தற்போது இலங்கை போன்ற குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளிலும் வேகமாக அதிகரித்து வருகிறது.

குறிப்பாக, கொழும்பு போன்ற நகர்ப்புறங்களில் ஒரே நேரத்தில் ஊட்டச்சத்து குறைபாடும் மற்றும் உடற்பருமனும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனை ஊட்டச்சத்து குறைபாட்டின் "இரட்டைச் சுமை" என்று அவர் குறிப்பிடுகிறார்.

சிறுவர்களின் வயது மற்றும் பாலினத்துக்கு ஏற்ப சரி செய்யப்பட்ட உடல் நிறை குறியீட்டெண் மூலம் இது அளவிடப்படுகிறது.

இதில் 95 ஆவது சதவிகிதத்துக்கு மேல் இருப்பவர்கள் உடற்பருமன் கொண்டவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இதனைத் தொடக்கத்திலேயே கண்டறியத் தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

உடற்பருமன் காரணமாகச் சிறுவர்களுக்குப் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் அசாதாரண கொலஸ்ட்ரால் அளவு.

ரைப் 2 நீரிழிவு நோய் மற்றும் இன்சுலின் எதிர்ப்புத் திறன்.

கல்லீரல் பாதிப்பு மற்றும் தூக்கத்தில் சுவாசக் கோளாறு.

எலும்பு தொடர்பான சிக்கல்கள் மற்றும் தோல் நோய்கள்.

குறைந்த சுயமரியாதை, பதற்றம் மற்றும் மனச்சோர்வு போன்ற உளவியல் பாதிப்புகள்.

எதிர்காலத்தில் இதய நோய், சிறுநீரகப் பாதிப்பு மற்றும் புற்றுநோய் அபாயம் என்பனவும் இவற்றில் உள்ளடங்கும்.

எனவே சிறுவர் உடற்பருமன் அதிகரிப்பதற்கான முக்கிய காரணங்களாக, பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் சர்க்கரை கலந்த பானங்களை அதிகம் உட்கொள்ளுதல்.

உடல் உழைப்பு குறைதல் மற்றும் அதிக நேரம் திரையைப் பார்த்தல். போதிய உறக்கமின்மை மற்றும் நகர்ப்புற வாழ்க்கை முறை மாற்றங்கள் என்பன காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தடுக்க சுகாதாரத் துறை, பாடசாலைகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் குடும்பங்கள் இணைந்து செயல்படவேண்டும்.

முறையான பாடசாலை உணவுத் திட்டங்கள், உணவு விளம்பரங்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் உடற்பயிற்சியை ஊக்குவிக்கும் வகையிலான நகர்ப்புறத் திட்டமிடல் போன்றவை அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## 2030 ஆம் ஆண்டுக்குள் 36 பில்லியன் டொலர் அந்நியச் செலாவணி இலக்கு

கொழும்பு, மே. 07

இலங்கை தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் மூலம் 2030ஆம் ஆண்டிற்குள் 36 பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டுச் செலாவணியாக ஈட்டுவதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது. நாட்டின் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப் புக்கான அதிகாரபூர்வ மூலோபாயக் கட்டமைப்பாக அமைச்சரவை இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பொது மற்றும் தனியார் துறையினருடன் இணைந்து இந்த திட்டத்தை தயாரித்துள்ளது. (அ)

## பொலனறுவை பகுதியில் போலி மருத்துவர் கைது!

கொழும்பு, மே. 07

பொலனறுவை, தீப உயன பகுதியில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்த 59 வயதான போலி மருத்துவர் ஒருவர், பொலனறுவை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல், பன்னலவைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஹிங்குரகொட மருத்துவமனையின் மகப்பேற்று விடுதியில் பணிபுரியும் மருத்துவர் எனத் தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டு மோசடிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். சந்தேக நபரிடமிருந்து மருத்துவக் குழாய், மருத்துவச் சீருடை மற்றும் போலி அடையாள அட்டை என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏற்கனவே பொரளை, கண்டி, மினுவாங்கொடை மற்றும் திவுலப்பிட்டிய ஆகிய பொலிஸ்நிலையங்களில் பல்வேறு குற்றங்களுக்காக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், இவர் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தவர் என்பதும் தெரியவந்துள்ளது. (அ)

## 4 ஆயிரம் அதிபர் வெற்றிடங்கள்!

கொழும்பு, மே. 07

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட தகவல்களின்படி, நாடு முழுவதும் பாடசாலைகளில் 4,000 இற்கும் அதிகமான அதிபர் வெற்றிடங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களைத் தாமதமின்றி உடனடியாகத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கல்வி மற்றும் உயர்கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன உறுதியளித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், அதிபர் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை சில தொழில்நுட்பக் காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அவர் விளக்கினார். குறித்த பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு, கூடிய விரைவில் பரீட்சையை நடத்தி உரிய நியமனங்களை வழங்கத் தேர்வுகள் திணைக்களம் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# திறைசேரி அதிகாரி மரணம் குறித்து கருத்து; உதய கம்மன்பில கைது செய்யப்பட வாய்ப்பு?

கொழும்பு, மே. 07

திறைசேரியின் நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விசாரணையில் இருந்தபோது மர்மமான முறையில் உயிரிழந்த அதிகாரி ரங்க நிஷாந்தவின் மரணம் குறித்து பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்த கருத்துக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

இது தொடர்பாக கம்மன்பிலவிடம் விசாரணை நடத்தி, அவர் வேண்டுமென்றே விசாரணையைத் திசை திருப்பியிருந்தால் அவரை கைது செய்ய நேரிடும் என பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

உதய கம்மன்பில இந்த மரணம் தொடர்பாக ஐந்து முக்கிய காரணங்களை முன்வைத்து, தற்போதைய பிரேத பரிசோதனை அறிக்கையை நிராகரிப்பதாக கடந்த 4 ஆம் திகதி தெரிவித்துள்ளார்.

மரண விசாரணை முடிவதற்கு முன்னரே இது தற்கொலை என்று பொலிஸ் பேச்சாளர் அறிவித்தது ஏன் என்றும், கைரேகை அறிக்கை வரும் வரை காத்திருக்க முடியாத அளவுக்கு ஏதோ ஒரு சக்திவாய்ந்த நபரின் அழுத்தம் விசாரணைக் குழுவின் மீது இருப்பதாக அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்த பொலிஸ் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ். யூ. வுட்லர், கம்மன்பிலவின் கருத்துக்கள் பொய்யானவை என்று குறிப்பிட்டுள்ளார்.

கம்மன்பிலவிடம் விரைவில் வாக்குமூலம் பெறப்படும் என்றும், விசாரணையைத் தவறாக வழிநடத்தும் வகையில் அவர் பொய்ப் பிரசாரம் செய்திருந்தால், அந்த அடிப்படையில் அவர் கைது செய்யப்படுவார் என்றும் வுட்லர் தெரிவித்துள்ளார்.

மேலும், குளியாப்பிட்டிய நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் குறித்த மரண தொடர்பான விசாரணைக்கு கம்மன்பிலவை அழைத்து அவரது சாட்சியத்தைப் பதிவு செய்யவும் பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

சட்ட மருத்துவ நிபுணர்கள் மற்றும் விசாரணைக் குழுவினர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, பிரேத பரிசோதனை செய்த பின்னரே இது தற்கொலை என்ற முடிவுக்கு வந்துள்ளனர். அதேநேரம், உயிரிழந்தவரின் மனைவி, இந்த மரணத்தில் தமக்கு சந்தேகம் உள்ளதாக பொலிஸாருக்கு எதிராகச் செய்த முறைப்பாடு பொய்யானது எனவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)

## குமார ஜயக்கொடிக்கு எதிரான ஊழல் வழக்கு ஜூன் 17 முதல் விசாரணைக்கு!

கொழும்பு, மே. 07

முன்னாள் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷாந்த கொடவெல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கின் ஆரம்பகட்ட விசாரணைகளை நிறைவு செய்த நீதிபதி, வழக்கின் பிரதான விசாரணைகளை ஜூன் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிப்பதாக அறிவித்தார்.

குறித்த தினத்தில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியமளிக்குமாறு கோரி, வழக்கின் சாட்சியாளர்கள் இருவருக்கு அழைப்பாணை விடுக்கவும் நீதிபதி இதன்போது உத்தரவிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தினரால் 07.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.